ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

06.11.2025

1. ஞான ஆனந்தக் கடலே
ஞானிகளை படைக்கும் வடிவேலே
தானதருமம் தரணியில் நிலைக்க
தவசியாக அரங்க ஞானி என்னை

2. என்னை அவதாரம் ஆக்கியே
ஏழாம் படை வீடு படைத்த
அண்ணலே ஆறுமுகப் பெருமானே
அரங்கனும் உன் பெருமை கூறி

3. கூறியே விசுவாவசு துலை திங்கள்
குறைவிலா சூல குருவார அருளாசி
தெரிவிப்பேன் அருட்சுவடி வழி
தேசமெங்கும் சன்மார்க்கம் தழைக்க உரைப்பேன்

4. உரைக்கவே பிரணவக் குடிலை
உயர்வாய் அணுகி மக்கள்
அறந்தருமப் பணிகள் வகை
ஆறுமுகா அரங்கா என வேண்டி

5. வேண்டியே வழிபாடு செய்து
வினை வெல்ல வழிகாட்டு
தொண்டனாய் தூயமனம்பட
தொண்டாற்ற நல்ல சக்தி கொடு

6. சக்தி கொடுயென வேண்டியே
சன்மார்க்க நெறி வழியில்
பக்குவமும் தாயென வேண்டியே
பணிந்துமே சரவண ஜோதி வடிவான

7. வடிவான அரங்கனெனை வணங்கி
வல்லமைபட ஆன்மபலமுடன்
இடர் தடைகளை வெல்லும்
எல்லா பலமும் தாயென வேண்டி

8. வேண்டியே முழு சரணாகதி கொண்டு
வெற்றிக்கு அரங்கன் வகுத்த
தொண்டிலும் அன்னதானம் வகையிலும்
தொண்டாற்றிப் பொருளுதவி செய்து

9. செய்துமே தருமம் வளர்த்திடும்
சேவைதனை செய்து வர
அய்யமற வினைகள் அகன்று
ஆபத்து கண்டமல்லல் அகன்று

10. அகன்றுமே நல்வினை பெருகிட
ஆன்மபலம் ஞானவழி கூடியே
மகான்களும் இறங்கி அருள
மக்களெல்லாம் மேல்நிலை அடைந்து

11. அடைந்துமே அரங்கனென் வழியில்
அணுகுவார் அனைவரும் ஞானியாவர்
தடைவென்று இந்த தரணியையே
தருமலோகம் ஆக்குவர் என்பேன்

ஆறுமுக அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி